உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! கழக முதன்மைச் செயலாளர்

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு இல்லத் திருமண விழா!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 13-

கழக முதன்மைச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.என். நேரு எம்.எல்.ஏ. அவர்களின் சகோதரர் என்.ரவிச்சந்திரன் - சங்கரி ரவிச்சந்திரன் ஆகியோரின் புதல்வர் விஷால் நாராயண் - பெங்களூரு ஜெகதீஷ் பாட்டில் - திருமதி அனுபமா ஜெகதீஷ் பாட்டில் ஆகியோரின் புதல்வி ரிஷா பாட்டில் ஆகியோரின் திருமண விழா 16.11.2026 திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை நீலாங்கரை கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்துள்ள ஆர்.கே. கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகிறது.

முன்னதாக 15.11.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் மணவிழா வரவேற்பு நடைபெறுகிறது.

இம்மண விழாவிற்கு கழகத் தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

மண விழாவிற்கு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் ஆர்.டி.ஆர் பாலு எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் ஆர்க்காடு நா. வீராசாமி, கழக துணைப் பொது செயலாளர்கள் ஜ.பெரியசாமி எம்.எல்.ஏ., கனிமொழி ராசாத்தி கருணாநிதி எம்.பி., ஆ.ராசா எம்.பி., க.பொன்முடி, திருச்சி என். சிவா எம்.பி., அந்தியூர் செல்வராஜ், வெள்ளகோவில் சாமிநாதன், முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ.,

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ.,

மற்றும் ஆலத்தூர் என்.கிருஷ்ண மூர்த்தி, அருண் நேரு எம்.பி., சீ.கதிரவன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், இரா.ஆவுடையப்பன் மு.அப்பாவு, சு. முத்துசாமி, எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., கு.பிச்சாண்டி, துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., கே.ஆர்.பெரிய கருப்பன், தா.மோ. அன்பரசன், பி.கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் எம்.எல்.ஏ., அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆர்.காந்தி, மா.சுப்பிரமணியன், பி.மூர்த்தி, எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ., பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ.,

திருச்சி மேயர் மு.அன்பழகன், குத்தாலம் பி.கல்யாணம், செ. ராமலிங்கம், கோவி செழியன் எம்.எல்.ஏ., சி.வி.கணேசன் எம்.எல்.ஏ., ஆர்.வைத்திலிங்கம் எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர், டி.ஆர். பி.ராஜா, மருத்துவர் மதிவேந்தன், இரா.ராஜேந்திரன், கயல் விழி செல்வராஜ், பெ.பழனியப்பன்,

பாண்டிச்சேரி சிவா, வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., வி.ஜி. ராஜேந்திரன், அன்னியூர் சிவா, காடுவெட்டி என்.தியாகராஜன், க.வைரமணி, வி.ஜெகதீசன், ஏ.கே. எஸ்.விஜயன், செளந்தர பாண்டியன், செ.ஸ்டாலின் குமார், மு.பழனியாண்டி, கா. ராமச்சந்திரன்,

செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மனோ தங்கராஜ், பி.வில்சன் எம்.பி., என். ஆர்.இளங்கோ, கே.என்.சேகரன், அன்பில் பெரியசாமி, எஸ்.இனிகோ இருதயராஜ், ப.அப்துல் சமது, பா. பரணி குமார் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இம்மணவிழாவில் நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், சட்ட மன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

கழக முதன்மைச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ. நன்றி உரையாற்றுகிறார்.

மாவட்ட ஆட்சியருக்கு த.வெ.க. எம்.எல்.ஏ. ஆபாச குறுஞ்செய்தி!

காணவில்லையே! எங்கே போனீர்கள்?

த.வெ.க.வினருக்கு - தி.மு.க. மகளிர் அணி சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, நவ.13-

பெண் மாவட்ட ஆட்சியரிடமே ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய த.வெ.க. எம்.எல்.ஏ. ஒருவர் பற்றி வாய் திறக்காமல் எங்கே காணாமல் போனீர்கள் என்று த.வெ.க.வினருக்கு, குறிப்பாக பெண் அமைச்சர்கள் மற்றும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கழக மகளிர் அணி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக வெளியான சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு பெண் கவுன்சிலர் உங்கள் தலைவரை விமர்சித்துப் பேசியபோது, ஏதோ அவர் கொடுங்குற்றம் செய்தது போலக் கொந்தளித்தீர்களே... இப்போது உங்கள் கட்சி எம்.எல்.ஏ.



ஒரு பெண் அதிகாரியை அதுவும் ஒரு மாவட்ட ஆட்சியரிடமே ஆபாசமாக நடந்துகொண்டுள்ளார். இப்போது உங்கள் வாய்களை Fevikwik போட்டு ஒட்டிக் கொண்டுள்ளீர்களா?

Instagram Paid Influencerகளை போல தினம் ரீல்ஸ் போட்டுக் கொண்டு உங்கள் இருப்பைக் காட்டிக் கொண்டிருக்கும் சுயமற்ற நீங்கள், அந்த மாவட்ட ஆட்சியருக்காக குரல் கொடுத்தால் தான் ஆச்சரியம்.

உங்கள் Narcissistic தலைவரின் பிம்பத்துக்குச் சின்னக் கீறல் விழுந்தாலே 'பெண்களைக் குறிவைக்கிறார்கள்' என்று குரல் கொடுக்கிறீர்களே, ஒரு பெண் அதிகாரிக்காகக் குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில் மட்டும் எங்கே போனீர்கள்?

இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பங்கேற்காத கள்ளக்குறிச்சி கலெக்டர்!

முகாம் அலுவலகத்திலேயே பணிகளை மேற்கொண்டார்!

கள்ளக்குறிச்சி, நவ.13-

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் பத்மஜாவுக்கு கள்ளக்குறிச்சி த.வெ.க. எம்.எல்.ஏ. அருள்விக் னேஷ், தனது செல்போனில் இருந்து சர்ச்சைக்குரிய வகையில் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக புகார் எழுந்தது. இந்த தகவல் சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும் எதிர்ப்பு தெரிவித்து, கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கல்வராயன்மலையில் உள்ள கிளாக்காடு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நேற்று முன்தினம் கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் பத்மஜா தலைமையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்திருந்தது. மேலும் அதற்கான முன்னேற்பாடு பணிகளும் நடைபெற்றன.

ஆனால் நேற்று நடந்த முகாமில் மாவட்ட கலெக்டர் பத்மஜா பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவா கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கலெக்டர் பத்மஜா நேற்று கலெக்டர் அலுவலகத்திற்கும் செல்ல வில்லை. மாறாக தனது முகாம் அலுவலகத் திலேயே இருந்து அலுவலக பணிகளை மேற்கொண்டார்.



சென்னை – தியகராயர் நகர் தொகுதி முன்னாள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சந்திரன் ஜெயபால் அவர்களின் பேரனும் – வழக்கறிஞர் ரவிந்தர்நாத் ஜெயபாலின் மகனுமான அர்ஜுன் – பிரியதர்ஷினி ஆகியோரின் திருமணம், சென்னை – மேயர் இராமநாதன் அரங்கில் நடைபெற்றது. இத்திருமணத்தில் கழகத் தலைவர் அவர்களின் வாழ்த்து மடலை, கழகத் தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். முன்னாள் ஏடி.ஜி.பி., திருமதி. வனிதா, பழங்காநத்தம் பகுதிச் செயலாளர் எஸ்.வி.சுதன் மற்றும் நீதிபதிகள், அரசியல் பிரமுகர்கள் இம்மணவிழாவில் கலந்து கொண்டனர்.

இதுவரை ரூ.6 கோடியே 59 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 59 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 12-11-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	கு. செல்லையா, மாயமான்குறிச்சி, ஆலங்குளம், தென்காசி மாவட்டம்.	25,000/–
2.	பொ.தங்கராஜ், முக்காணி, ஏரல், திருவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம்.	25,000/–
3.	என்.சண்முகம், ஆஸ்ராமம், சுசீந்திரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.	25,000/–
4.	கே.நிஷார், நெ.8, 4வது தெரு, ஆயிரம்விளக்கு, சென்னை – 6	25,000/–
5.	இருதயமேரி, சி.கே.எஸ்பிளாட், புதுத்தெரு, சாந்தோம், சென்னை – 4	25,000/–
6.	பி.வெங்கடேசன், மேல்நல்லாத்தூர் அஞ்சல், கடம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்	25,000/–
7.	செள.ஆரோக்கியராசு, கஸ்தூரிபாய் நகர், அனகாபுத்தூர், சென்னை – 70.	25,000/–
8.	ஏ.இ.என்.நாகராஜ், வி.எம்.டி.என்கிளவ், கங்காபுரம், ஆம்பூர், திருப்பத்தூர்	25,000/–
	மொத்தம்	**ரூ.2,00,000/-**

முல்லைப்பெரியாறு அணையில் - துணைக் கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு!

தேனி,நவ.13-

தமிழக – கேரள எல்லையில் உள்ள முல்லைப்பெரியாறு அணையில் துணைக் கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக முல்லைப் பெரியாறு அணை திகழ்ந்து வருகிறது. தமிழக கேரள எல்லையில் உள்ள முல்லைப்பெரியாறு அணையைக் கண்காணிக்க தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் அனில் ஜெயின் தலைமையிலான மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வைக் குழுவிற்கு உதவியாக, முல்லைப்பெரியாறு அணைக்குத் துணைக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அணைகள் பாதுகாப்பு ஆணையத் தென் மண்டல இயக்குநர் கிரிதரன் தலைமையிலான துணைக்குழுவினர், கடந்த ஆகஸ்ட் மாதம் அணையில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று தேக்கடி படகுத்துறையிலிருந்து படகின் மூலம் சென்ற ஆய்வுக்குழுவினர், பிரதான அணை, சிற்றணை, அணைக்கு வரும் நீர்வரத்து, நீர்க்கசிவு, மதகுகளின் இயக்கம் மற்றும் கேலரிப் பகுதிகளை ஆய்வு செய்தனர்.

இதனிடையே, அணையின் நீர்மட்டம் 122 அடியாகவும், நீர்வரத்து 635 கன அடியாகவும் உள்ளது.



கழக இளைஞர் அணியின் மண்டலம்-1-க்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று முன்தினம் (11.11.2026) அன்பகத்தில், துணைச் செயலாளர் ஜோயல் தலைமையில் நடைபெற்றது. கழக இளைஞர் அணிச் செயலாளர் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை, எளிய மக்களுக்கு பயனுள்ள வகையில் கொண்டாடுவது குறித்தும், எதிர்வரவுள்ள இடைத்தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலும், இந்தக் கூட்டத்தில் கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.கருணா பங்கேற்று, சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில், சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட இளைஞர் அணி, மாவட்ட அமைப்பாளர்கள் ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ராஜா அன்பழகன், ப.பிரகாஷ், ஆர்.டி.மதன் குமார், வானவில் விஜய் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.